بسم الله الرحمن الرحيم

# கேள்வி : 58

# ஸகாத்துல் (ஸதகத்துல்) பித்ர் பற்றி விளக்கவும்?

## பதில்:

ஸகாதுல் பித்ர் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும், அதாவது ஈத்துடைய தினத்தன்று, தனக்கும் தனது குடும்பத்திற்கும் போதுமான அளவிற்கு உணவைப் பெற்று, அதில் எஞ்சுமளவிற்கு யார் இருக்கின்றாரோ அவர்கள் அனைவரின் மீதும் கடமையாகும். இதை நபி(ஸல்)அவர்கள்தான் நமக்கு கடமையாக்கினார்கள்.

عن ابن عمر رضي الله عنهما قال : ( فرض رسول الله صلى الله عليه وسلم زكاة الفطر صاعاً من تمر أو صاعاً من شعير ، على العبد والحر والذكر والأنثى والصغير والكبير من المسلمين، وأمر بها أن تؤدى قبل خروج الناس إلى الصلاة ) متفق عليه

நபி(ஸல்)அவர்கள் பேரித்தம் பழத்திலிருந்து, அல்லது கோதுமையிலிருந்து ஒரு மரக்காலை ஸகாத்துல் பித்தராக நிர்ணயித்தார்கள். (இது) முஸ்லீம்களில் உள்ள அடிமை, உரிமைபெற்றவர், ஆண், பெண், பெரியவர், சிறியவர் என அனைவரின் மீதும் கடமையாக்கினார்கள். அதை மக்கள் ஈத் தொழுகைக்கு வெளிக்கிளம்புவதற்கு முன்னால் நிறைவேற்றிட வேண்டும் என்று ஏவினார்கள் என்று இப்னு உமர்(ரலி)அவர்கள் அறிவிக்கின்றார்கள். (நூல்: புஹாரி, முஸ்லிம்)

أبو سعيد الخدري رضي الله عنه قال : ( كنا نخرج زكاة الفطر إذ كان فينا رسول الله صلى الله عليه وسلم صاعاً من طعام أو صاعاً من تمر أو صاعاً من شعير أو صاعاً من زبيب أو صاعاً من أقط ) متفق عليه.

நபி(ஸல்)அவர்கள் எங்களுடன் இருந்தபோது உணவுப் பொருட்களிலிருந்து ஒரு மரக்கால், அல்லது பேரித்தம் பழத்திலிருந்து ஒருமரக்கால், அல்லது

**கோதுமையிலிருந்து ஒருமரக்கால், அல்லது காய்ந்த திராட்சையிலிருந்து ஒருமரக்கால், அல்லது பாலாடை கட்டியிலிருந்து ஒருமரக்கால் ஸகாத்துல் பித்ராக கொடுக்கக் கூடியவர்களாக இருந்தோம் என்று அபீ ஸயீத் அல்குத்ரி(ரலி)அவர்கள் அரிக்கின்றார்கள்.**(நூல்: புஹாரி, முஸ்லிம்)

மேற்கண்ட ஹதீஸ்களிருந்து ஸகாத்துல் பித்ர் என்பது முஸ்லிமான ஆண், பெண், சிறியவர், பெரியவர் என அனைவரின் மீதும், அதாவது பெருநாள் தினத்தன்று தனக்கும், தனது குடும்பத்திற்கு சுயமாக உணவளித்து, அதில் எஞ்சுமளவிற்கு பொருளாதாரம் இருந்தாலே, அவர்மீது ஸகாத்துல் பித்ர் கடமையாகிவிடும்.

அஷ்ஷைக் உதைமீன்(ரஹ்)அவர்களிடம் யாரின்மீதெல்லாம் ஸகாத்துல் பித்ர் கடமையாகும் என்று கேட்கப்பட்டபோது,

فأجاب فضيلته بقوله: تجب على كل إنسان من المسلمين ذكراً كان أو أنثى، صغيراً كان أم كبيراً، سواء كان صائماً أم لم يصم، كما لو كان مسافراً ولم يصم فإن صدقة الفطر تلزمه.

**முஸ்லீம்களிலிருந்து ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ, சிறியவராகவோ அல்லது பெரியவராகவோ, நோன்பாளியாகவோ அல்லது நோன்புநோற்காதவராகவோ இருந்தாலும் சரி அனைவரின் மீதும் கடமையாகும். உதாரணத்திற்கு, ஒருவர் (ரமலான் முழுவதும்) பிரயாணத்தில் இருந்தார், அவரால் நோன்பு நோற்கமுடியவில்லை என்றாலும் அவரின் மீதும் ஸகாத்துல் பித்ர் கடமையாகும் என்று பதிலளித்துள்ளார்கள்.** (நூல் : பதாவா இப்னு உதைமீன்)

ஸகாத்துல் பித்ராக கோதுமையோ, அல்லது பேரித்தம்பழமோ, அல்லது அவரவர் பகுதியில் எது உணவாக உட்கொள்ளப்படுமோ அந்த தானியங்களிலிருந்து ஒரு மரக்கால் அளவிற்கு ஸகாத்துல் பித்ர் குடும்பத்திலுள்ள அனைவருக்கும் கொடுக்கவேண்டும். அதை ஈத் தொழுகைக்குச் செல்வதற்கு முன்னால் கொடுத்துவிடவேண்டும் என்பதை விளங்கிக்கொண்டோம்.

ஸகாத்துல் பித்ரை ரமலான் மாதத்தின் ஆரம்பத்தில அல்லது இடையிலோ கொடுத்துவிடலாமா? ஸகாத்துல் பித்ர் உணவுப் பொருளாக கொடுப்பதற்குப் பதிலாக ஒருமரக்காலின் கிரயத் தொகையை பணமாக கொடுத்துவிடலாமா என்ற கேள்விகளுக்கு, அஷ்ஷைக் இப்னு உதைமீன்(ரஹ்)அவர்கள் கீழ்க் காணுமாறு பதிலளித்துள்ளார்கள்.

أجاب فضيلته بقوله: لا يجوز إخراج زكاة الفطر في أول شهر رمضان، وإنما يكون إخراجها قبل العيد بيوم أو يومين؛ لأنها زكاة الفطر، والفطر لا يكون إلا في آخر الشهر، ورسول الله صلى

الله عليه وسلم أمر أن تؤدى قبل خروج الناس إلى الصلاة، ومع ذلك كان الصحابة يعطونها قبل العيد بيوم أو يومين.ووقت فضيلة وهو: يوم العيد قبل الصلاة. أما إخراجها نقداً فلا يجزىء؛ لأنها فرضت من الطعام، قال ابن عمر ـ رضي الله عنهما ـ: "فرض رسول الله صلى الله عليه وسلم زكاة الفطر صاعاً من تمروقال أبو سعيد الخدري: "كنا نخرجها على عهد رسول الله صلى الله عليه وسلم صاعاً من طعام.فتبين من هذين الحديثين أنها لا تجزىء إلا من الطعام.

ரமளானுடைய ஆரம்பத்திலேயே ஸகாத்துல் பித்ரை கொடுப்பது கூடாது. அதை பெருநாளைக்கு ஒருநாளோ அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னால் வேண்டுமென்றால் கொடுக்கலாம். ஏனென்றால் அது பித்ருடைய நாளுக்குரிய ஸகாத்தாகும். பித்ர் என்பது (ரமளான்) மாதத்தின் இறுதியில் தவிர ஆகாது. நபி(ஸல்)அவர்கள் ஸகாத்துல் பித்ரை பெருநாள் தொழுகைக்கு போவதற்கு முன்னால் கொடுக்கும்படி கட்டளையிட்டார்கள். ஸஹாபாக்களில் ஒருசிலர் ஈத்துடைய நாளைக்கு ஒருநாள் அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னாலே கொடுப்பவர்களாக இருந்திருக்கின்றார்கள். ஆனால் சிறந்த நேரம் பெருநாள் தொழுகைக்கு முன்னால் கொடுப்பதுதான் சிறந்ததாகும்.

ஸகாத்துல் பித்ராக உணவுப்பொருளுக்குப் பகரமாக அதனுடைய கிரையத்தொகையை பணமாக கொடுப்பது கூடாது. ஏனெனில், அது உணவுப் பொருளாகத்தான் கடமையாக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் மேற்கண்ட இப்னு உமர்(ரலி)அவர்கள் அறிவித்துள்ள ஹதீஸும், மற்றும் அபீ ஸயீத் அல்குத்ரி(ரலி) அவர்கள் அறிவித்துள்ள ஹதீஸும், ஸகாத்துல் பித்ராக உணவுப் பொருளைக் கொண்டே தவிர (பணமாக கொடுப்பது) கூடாது என்பதை, இந்த இரண்டு ஹதீஸ்களும் நமக்கு தெளிவுபடுத்துகின்றன.

ஸகாத்துல் பித்ரை ஈத் தொழுகைக்கு முன்னால் நிறைவேற்றிடவேண்டும் என்பதை வலியுறுத்தும் மற்றொரு ஹதீஸ்,

ابن عباس رضى الله عنه: «فَرَضَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ زَكَاةَ الْفِطْرِ طُهْرَةً لِلصَّائِمِ مِنَ اللَّغْوِ وَالرَّفَثِ، وَطُعْمَةً لِلْمَسَاكِينِ، فَمَنْ أَدَّاهَا قَبْلَ الصَّلَاةِ، فَهِيَ زَكَاةٌ مَقْبُولَةٌ، فَمَنْ أَدَّاهَا بَعْدَ الصَّلَاةِ، فَهِيَ صَدَقَةٌ مِنَ الصَّدَقَاتِ»،

வீண் விளையாட்டுகளிருந்து நோன்பாளியை பரிசுத்தப்படுத்தக் கூடியதாகவும், ஏழைகளுக்கு உணவளிப்பதற்காகவும் ஸகாத்துல் பித்ரை நபி(ஸல்)அவர்கள் கடமையாக்கினார்கள். எவர் ஈத் தொழுகைக்கு முன்னால் நிறைவேற்றிவிடுகிறாரோ அது ஒப்புக்கொள்ளப்பட்ட ஸகாத்தாகும். எவர்

தொழுகைக்குப் பின்னால் அதை நிறைவேற்றுகிறாரோ அது தர்மங்களிருந்து ஒரு தர்மமாகும் என்று நபி(ஸல்)அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ்(ரலி)அவர்கள் அறிவிக்கின்றார்கள். (நூல்: இப்னு மாஜா, ஹாகிம், அல்பைஹகீ, தாரகுத்னி)

இந்த ஹதீஸின் மூலம்,ஸகாத்துல் பித்ரை நிறைவேற்றுவதின் மூலம், ஒரு நோன்பாளி அவருடைய நோன்புகாலத்தில் ஏதாகிலும் சிறு சிறு தவறுகள் செய்திருந்தால் அதை விட்டும் அவர் பரிசுத்தப்படுத்தப்படுகிறார் என்பதும் நமக்கு தெளிவாகிறது.

ஒருவர் ஸகாத்துல் பித்ர் கொடுக்க மறந்துவிட்டார், அவருக்கு ஈத் தொழுகைக்குப் பின்னால் தான் நினைவிற்கு வருகிறது என்றால்? அவர் அந்த ஸகாத்துல் பித்ரை நிறைவேற்ற வேண்டுமா? என்று அஷ்ஷைக் இப்னு உதைமீன்(ரஹ்)அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்க்கு கீழ்க்காணுமாறு பதிலளித்துள்ளார்கள்.

" زكاة الفطر مفروضة ، قال ابن عمر رضي الله عنهما : (فرض رسول الله صلى الله عليه وسلم زكاة الفطر) ، فهي مفروضة على كل واحد من المسلمين ، على الذكر والأنثى ، والصغير ، والكبير ، والحر والعبد ، وإذا قدر أنه جاء العيد فجأة قبل أن تخرجها فإنك تخرجها يوم العيد ولو بعد الصلاة ، لأن العبادة المفروضة إذا فات وقتها لعذر فإنها تقضى متى زال ذلك العذر ، لقول النبي صلى الله عليه وسلم: (مَنْ نَسِيَ صَلَاةً فَلْيُصَلِّ إِذَا ذَكَرَهَا لَا كَفَّارَةَ لَهَا إِلَّا ذَلِكَ ) رواه البخاري ، ومسلم.وعلى هذا يا أخي السائل فإن عليك إخراجها الآن" انتهى. مجموع فتاوى ابن عثيمين.

ஸகாத்துல் பித்ர் என்பது கடமையாக்கப்பட்டதாகும், "நபி(ஸல்)அவர்கள் ஸகாத்துல் பித்ரை கடமையாக்கினார்கள்" என்று இப்னு உமர்(ரலி)அவர்கள் அறிவிக்கின்றார்கள். எனவே, முஸ்லீம்களிலிருந்து ஆண்கள் பெண்கள் பெரியவர் சிறியவர், அடிமை உரிமைபெற்றவர் என அனைவரின் மீதும் கடமையாகும். உதாரணத்திற்கு, ஈத் திடீரென்று வந்துவிட்டது , சாகாத்தருள் பித்ரை தொழுகைக்கு முன்னால் நிறைவேற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றால், அதை தொழுகைக்குப் பின்னாலும் நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால் கடமையாக்கப்பட்ட வணக்க வழிபாட்டை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்ற முடியாத சூழல் ஏற்பட்டுவிட்டால், எப்போது அந்த காரணம், தடை நீங்குகிறதோ அப்போது அதை நிறைவேற்றவேண்டும். உதாரணத்திற்கு, ஒருவர் தொழுகையை மறந்துவிட்டால், எப்போது அவருக்கு அது நினைவிற்கு வருகிறதோ அப்போது அதை தொழுது கொள்ளட்டும்,

இதைத்தவிர அதற்கு வேறு பரிகாரங்கள் இல்லை என்று நபி(ஸல்)அவர்கள் கூறியிருக்கின்றார்கள். (நூல்: புஹாரி, முஸ்லிம்)

எனவே, சகோதரரே இந்த ஹதீஸின் படி தொழுகைக்கு முன்னால் நிறைவேற்ற முடியாவிட்டால், அதை (தொழுகைக்குப்)பின்னாலும் நிறைவேற்றவேண்டும் என்பது தெளிவாகிறது. (நூல்:மஜ்மூவுல்பதாவா இப்னு உதைமீன் - 271/20)

## அல்லாஹ்வே மிக அறிந்தவன்!.

இப்படிக்கு,

தொகுப்பு மற்றும் மொழியாக்கம்

K .K . பிஸ்மில்லாஹ் கான் பைஜி